**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.303/2023**
**வழக்கு சாட்சி PW-11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.விஜயகுமார் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | செல்வராஜ் | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 50 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 18.02.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் குடிமை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.07.2021ம் தேதி, இரவு 07.00 மணியளவில் பணியில் இருந்தபோது, 30 வயது மதிக்கத்தக்க திலீப் என்பவரை அவருடைய தாயார் தெய்வக்கனி என்பவர் என்னிடம் சிகிச்சைக்காக ஊத்துமலை ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து மேல்சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த 2 நபர்கள் அரிவாளை வைத்து 06.07.2021ம் தேதி, மாலை 04.30 மணிக்கு கருவந்தா ஊரில் உள்ள தனது மச்சானின் வீட்டின் அருகில் வைத்து தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதனை செய்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன.

அவருடைய முன்கையில் 10 x 5 x 2 cm அளவில் உள்பக்கம் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. அதற்கு கீழேயுள்ள தசைகள் வெட்டிய நிலையில் காணப்பட்டது. நான் அவரை மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். நான் எந்தக் கை என்று விபத்து பதிவேட்டில் குறிப்பிட தவறுதலாக விடுபட்டது.

ஆனால், நான் இன்றைய தினம் மருத்துவமனை சிகிச்சை குறிப்பை எடுத்து வந்துள்ளேன். அதில் திருநெல்வேலி மருத்துவமனையில் இருந்து நான் கருத்துரு வழங்குவதற்காக வழங்கப்பட்ட சிகிச்சை விபரக்குறிப்புகள் இணைக்கப்பட்டுள்ளது. அதில்  இடது கை என குறிப்பிடபட்டுள்ளது. திருநெல்வேலி அரசு மருத்துவமனையிலிருந்து வழங்கப்பட்ட சிகிச்சை குறிப்புகள் படி காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் எனச்சான்று வழங்கினேன். அந்த விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று அ.சா.ஆ.5 ஆகும். (மருத்துவமனை கேஸ் சீட்டுடன் இணைக்கப்பட்டிருந்த திருநெல்வேலி அரசு மருத்துவமனை சிகிச்சை விபரக்குறிப்புகளை குறியீடு செய்ய வேண்டி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார். இந்த வழக்கை தீர்மானிப்பதற்கு திருநெல்வேலி அரசு மருத்துவமனை சிகிச்சை குறிப்புகள் இன்றியமையாதது என்பதினால் அதனை சாட்சி சான்றாவணமாக குறியீடு செய்ய அனுமதி வழங்கப்பட்டது). திருநெல்வேலி அரசு மருத்துவமனை மருத்துவரால் வழங்கப்பட்ட சிகிச்சை குறிப்புகள் **சா.சா.ஆ.1** ஆகும்.

அதே நாள், இரவு 07.10 மணியளவில் நான் பணியில் இருந்தபோது, 32 வயது மதிக்கத்தக்க ஜெயக்குமார் என்பவரை அவருடைய தாயார்

குத்தாலவடிவு என்பவர் என்னிடம் சிகிச்சைக்காக ஊத்துமலை ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து மேல்சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த 2 நபர்கள் அரிவாளை வைத்து 06.07.2021ம் தேதி, மாலை 04.30 மணிக்கு தனது வீட்டின் அருகில் வைத்து தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதனை செய்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன.

அவருடைய இடது உள்ளங்கையில் உள்பக்கம் 7 x 2 x 1 cm அளவில் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது. அதற்கு கீழேயுள்ள தசைகள் வெட்டிய நிலையில் காணப்பட்டது. நான் அவரை மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன்.

ஆனால், நான் இன்றைய தினம் மருத்துவமனை சிகிச்சை குறிப்பை எடுத்து வந்துள்ளேன். அதில் திருநெல்வேலி மருத்துவமனையில் இருந்து நான் கருத்துரு வழங்குவதற்காக வழங்கப்பட்ட சிகிச்சை விபரக்குறிப்புகள் இணைக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி அரசு மருத்துவமனையிலிருந்து வழங்கப்பட்ட சிகிச்சை குறிப்புகள் படி காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் எனச்சான்று வழங்கினேன். அந்த விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று அ.சா.ஆ.6 ஆகும். (மருத்துவமனை கேஸ் சீட்டுடன் இணைக்கப்பட்டிருந்த திருநெல்வேலி அரசு மருத்துவமனை சிகிச்சை விபரக்குறிப்புகளை குறியீடு செய்ய வேண்டி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார். இந்த வழக்கை தீர்மானிப்பதற்கு திருநெல்வேலி அரசு மருத்துவமனை சிகிச்சை குறிப்புகள் இன்றியமையாதது என்பதினால் அதனை சாட்சி சான்றாவணமாக குறியீடு

செய்ய அனுமதி வழங்கப்பட்டது). திருநெல்வேலி அரசு மருத்துவமனை மருத்துவரால் வழங்கப்பட்ட சிகிச்சை குறிப்புகள் **சா.சா.ஆ.2** ஆகும். காயம்பட்டவருக்கு ஏற்பட்ட காயங்கள் அரிவாளால் தாக்கும்போது அவர்கள் சொன்ன விதத்தில் ஏற்பட வாய்ப்புள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் எந்த தேதியில் சிகிச்சை குறிப்புகள் வழங்கப்பட்டது என்று சிகிச்சை குறிப்புகளில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மருத்துவரின் கையொப்பத்தின் கீழ் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தபோது, திருநெல்வேலி அரசு மருத்துவமனை சிகிச்சை குறிப்புகளை பார்த்து கருத்துரு வழங்கியதாக கூறவில்லை என்றால் சரியல்ல.

ஊத்துமலை ஆரம்ப சுகாதார நிலையத்தில் காயம்பட்டவர்கள் எடுத்துக்கொண்ட சிகிச்சை விபரங்களை நான் பார்த்தேன். காவல்துறையினர் விசாரித்தபோது, அரிவாள் காண்பித்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சிகிச்சை அளித்த 2 நபர்களுக்கும் ஏற்பட்டுள்ள காயங்கள் இருசக்கரவாகனத்தில் செல்லும்போது ஏற்பட வாய்ப்புள்ளது. நான் இடது கையா? வலது கையா? என்று குறிப்பிடாதது என்னுடைய பணிக்குறைப்பாட்டை காட்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.19 19:11:31 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 303/2023**
**வழக்கு சாட்சி PW–12**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கனகராஜன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | செல்லப்பா | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | திருச்செந்தூர் | வயது | : | 44 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 18.02.2026.

**(எதிரிகள் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருச்செந்தூர் கோவில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் ஊத்துமலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 06.07.2021ம் தேதி, மாலை 05.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, 9344582343 என்ற எண்ணிலிருந்து காவல்நிலைய தொலைபேசிக்கு வந்த தகவலை பெற்று ஊத்துமலை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்றபோது, அங்கு காயம்பட்ட ஜெயக்குமார், தீலிப் ஆகியோர் மேல்சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்று விட்டதால், 17.30 மணிக்கு தென்காசி அரசு மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த ஜெயக்குமார் என்பவரை விசாரித்து புகார்வாக்குமூலத்தை பதிவு செய்து, 21.00 மணிக்கு நிலையம் வந்து அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்.237/2021, சட்டப்பிரிவுகள் 294(பி), 342, 324, 307, 506(2) இதசவின் படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து, அதன் அசலை ஆலங்குளம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும், இதர நகல்களை

சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** –

முதல்தகவல்அறிக்கையில் காளம் எண்.4 ல் தகவலின் வகை எழுத்து மூலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காளம் எண்.13 ல் புகார் வாக்குமூலம் பெறப்பட்டு, வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காளம் எண்.15 ல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காளம் எண்.8 ல் தாமதத்திற்கான காரணம் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

நான் சொன்ன நாளில், நேரத்தில் புகார்தாரரிடமிருந்து எந்த புகார் வாக்குமூலமும் பெறவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** –

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.19 19:11:39 +0530